ஒன்பதாம் வகுப்பு – தமிழ்–மூன்றாம் பருவம்
வளரறி மற்றும் செயல்திட்ட வரைவு

| பாடம் | வளரறி மதிப்பீடு FA | செயல்திட்டம் |
|---|---|---|
| திருக்குறள் - சான்றாண்மை | சான்றோர்களின் குணங்களை மாணவர்கள் கூறுதல் | சான்றாண்மை கருத்துகளை மையமிட்டு மனவரைபடம் வரைதல் |
| பெண்மை | பெண்மை, தாய்மை குறித்த கருத்துகளை மாணவர்கள் சொல்லுதல் | தாயின் பண்புகள் (அல்லது) பெண்மையின் பன்முகங்கள் (அல்லது) நாமக்கல் கவிஞர் பற்றிய மனவரைபடம் வரைதல் |
| தில்லையாடி வள்ளியம்மை | விடுதலைப் போராட்டத்திற்குப் பாடுபட்ட வீராங்கனைகளைப் பற்றி மாணவர்கள் மொழிதல் | தென் ஆப்பிரிகா வரைபடத்தில் வால்க்ஸ்ரஸ்ட் குறிப்பிடுதல் (அல்லது) இந்தியன் ஒப்பீனியன் இதழ் உருவம், தில்லையாடி வள்ளியம்மை நினைவு மண்டபம் படம், நினைத்தூண் படம் எடுத்து வருதல் |
| இராணி மங்கம்மாள் | மதுரையின் சிறப்பைப் பற்றி மாணவர்கள் கூறுதல் | ஊஞ்சல் திருவிழா, மத்தியச் சந்தை, தமுக்கம் அரண்மனை பற்றிய செய்திகளைத் திரட்டி வருதல் (அல்லது) ரவிவர்மா, ஷாஜி, பாலாஜி பண்டிதர், பாதிரியார் மெல்லொ உருவப் படம் கொண்டுவருதல் (அல்லது) தமிழக வரைபடத்தில் மங்கம்மா சாலை குறிப்பிடுதல் |
| பெயர்ச்சொல்-மூவிடப்பெயர்கள | தனக்குத் தெரிந்த வேற்றுமை உருபுகளை மாணவர்கள் சொல்லுல் | தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்களுக்கு மனவரைபடம் தயாரித்தல் |
| புணர்ச்சி | சேர்த்து எழுதுதலில் புதிய சான்றுகளை மாணவர்கள் பகர்தல் | விகாரப் புணர்ச்சிக்கான மனவரைபடம் வரைதல் |
| பொது | விளம்பரங்களைச் சொல்லச் செய்தல் | விளம்பரங்களைக் கொடுத்து அதன் மீது வினாக்கள் தயாரித்தல் (அல்லது) பிறமொழிச் சொற்களைக் கொடுத்துத் தமிழில் எழுதி வரச் செய்தல் (அல்லது) புதிய பாடலைக் கொடுத்துப் படிக்க வைத்தல் (அல்லது) புத்தகத்தில் உள்ளபடி (பக்கம் .எண்.33)தொகுப்பேடு தயாரித்தல் |
| இரட்சணிய யாத்திரிகம் | தனக்குத் தெரிந்த யேசுவின் கதைகளை மாணவர்கள் கூறல் | எச்.ஏ.கிருட்டினனார் வாழ்க்கைக் குறிப்பு தயாரித்தல் (அல்லது) திருநெல்வேலி மாவட்டம் வரைந்து கரையிருப்பு ஊர் குறிப்பிடுதல் |
| பொங்கல் திருவிழா | பொங்கல் திருவிழாவைப் பற்றி மாணவர்கள் சொல்லுதல் | செய்தித் தாளில் வரும் பொங்கல் விழா படங்களைத் தொகுத்து வருதல் (அல்லது) எருதுவிழா பற்றிய படங்களைத் தொகுத்து வருதல் |
| நேர்மை | நேர்மையைப் பற்றி மாணவர்கள் தம் கருத்தை வெளியிடுதல் | கதையை நாடகமாக மாணவர்கள் எழுதி வருதல் (அல்லது) மாணவர்கள் புதிய கதையை எழுதி வருதல் |
| ஆகுபெயர், பொருள்கோள் | ஆகுபெயர்களுக்கான சான்றுகளைப் புதியதாக மாணவர்கள் சொல்லுதல் | பாடத்தில் உள்ள பொருள்கோளுக்கான சான்றுகளைப் புதியதாக எழுதி வருதல் |
| பொது | சிறுசேமிப்புக் குறித்து மாணவர்கள் கூறல் | மாணவர்கள் குழுவாக அமைந்து சிறுசேமிப்பு இதழ் தயாரித்தல் (அல்லது) குடியரசு தினவிழா குறித்து அறிக்கை எழுதுதல் (அல்லது) பாடத்தில உள்ள கதையை முடித்து எழுதுதல் |

| | | |
|---|---|---|
| புறநானூறு | செல்வத்தின் பயன்களை மாணவர்கள் சொல்லுதல் | புறநானூறு நூலை மாணவர்கள் கொண்டு வருதல் (அல்லது) பத்துப்பாட்டு நூலைக் கொண்டு வருதல் |
| குறுந்தொகை | நட்பைக் குறித்து மாணவர்கள் மொழிதல் | குறுந்தொகை பற்றி மனவரைபடம் வரைதல் (அல்லது) எட்டுத் தொகை நூல்களை எழுதி வருதல் (அல்லது) குறிஞ்சிப் பூ படம் கொண்டு வருதல் |
| உயிர்க்கோளம் | சுற்றுச்சூழல் மாசுபடுதல் பற்றி மாணவர்கள் தம் கருத்தைக் கூறல் | கடல் பொருள்களை மாணவர்கள் வரைந்து வருதல் (அல்லது) செய்தித்தாளில் வெளியாகும் நிலச்சரிவு, மண்ணரிப்பு படங்களை மாணவர்கள் கொண்டு வருதல் |
| நல்ல உள்ளம் | தமக்குத் தெரிந்த நல்ல மனிதர்களைப் பற்றி மாணவர்கள் தெரிவித்தல் | நல்ல உள்ளம் கதையை வைத்து ஓவியம் தீட்டுதல் |
| செய்யுள் உறுப்புகள் | மாணவர்களுக்குத் தெரிந்த செய்யுள் உறுப்புகள் கூறுதல் (அல்லது) மாணவர்களுக்குத் தமக்குத் தெரிந்த அணி வகைகளைச் சொல்லுதல் | குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடிக்கான புதிய உதாரணங்களை எழுதி வருதல் (அல்லது) எதுகை,மோனை, இயைபுத் தொடைகளுக்குப் புதிய சான்றுகளை மாணவர்கள் எழுதி வருதல் (அல்லது) அணிகளைப் பட்டியலிட்டு எழுதி வருதல் |
| பொது | நேர்காணல் பற்றிய செய்திகளை மாணவர்கள் கூறல் | புதிய நேர்காணலை மாணவர்கள் கொண்டு வருதல் (அல்லது) விடுபட்ட தமிழ் எண்களை எழுதி வருதல் (அல்லது) ஒரு படத்தை ஆசிரியர் காட்ட மாணவர்கள் தம் கருத்தை எழுதித் தருதல் |

அன்பான தமிழ்ச் சான்றோர்களுக்கு, வணக்கம்.

இத்துடன் மூன்றாம் பருவத்திற்கான வளரறி மதிப்பீடு, செயல்திட்டத்திற்கான வரைவு தரப்பட்டுள்ளது. தமிழ் முதல் தாள், இரண்டாம் தாளில் வளரறி மதிப்பீட்டிற்கு ஏதாவது 4 பாடம் போதும். அதுபோன்றே செயல்திட்டமும். இதில் வளரறி மதிப்பீடு வைத்த பகுதியிலேயே செயல்திட்டம் வைக்கவேண்டிய அவசியம் இல்லை. திட்டமிடுங்கள். நாட்களைத் தவறாமல் குறிப்பிட்டு வையுங்கள். எல்லாவற்றையும் ஒரு கோப்பாக வைத்துக் கொள்வது நலம் தரும்.

**அன்புடன், ரா. தாமோதரன், அ..மே.நி.பள்ளி, மெலட்டூர், தஞ்சை மாவட்டம் 614 301.**